# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 26**

# அறிவிப்புகள்

## 2017-2018

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## 1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ரூ.265.37 கோடி செலவில் 2,284 குடியிருப்புகள் கட்டுதல்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** வளர்ந்து வரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு, அவர்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றும் வகையில், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், மதுரை, கரூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ரூ.265.37 கோடி மதிப்பீட்டில் 2,284 குடியிருப்புகள் கட்டப்படும்.

**2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அரசு அலுவலர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.122.50 கோடி மதிப்பீட்டில் 248 குடியிருப்புகள் கட்டுதல்.**

சொந்தமாக ஒரு வீடு வாங்க வேண்டும் என்பது அனைவருடைய கனவாகும். அரசு ஊழியர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ், சென்னை அம்பத்தூர் அருகே அயப்பாக்கத்தில் ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவு அரசு அலுவலர்களுக்கு குறைந்த விலையில் வாரிய நிலத்தில் ரூ.122.50 கோடி மதிப்பீட்டில் 248 குடியிருப்புகள் வாரிய நிதியின் மூலம் கட்டப்படும்.

# கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்

**3. பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியிலிருந்து ரூ.100.00 கோடி அளவிற்கு கடன் வழங்குதல்.**

தமிழகத்தில் பெரும்பாலான கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்து போதிய நிதி ஆதாரமின்றி இயங்கி வருகின்றன. கடந்த காலங்களில் குறைந்த அளவே பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதனால் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தங்களது வணிக நடவடிக்கைகளின் மூலம் போதிய நிதி ஆதாரங்களை திரட்ட இயலவில்லை. எனவே, சங்க உறுப்பினர்களுக்கு அதிக அளவில் வீடு கட்ட கடனுதவி வழங்குவதன் மூலம் அச்சங்கங்களின் நிதி நிலையினை பெருக

செய்ய முடியும். இதனை கருத்தில் கொண்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** அரசின் உத்தரவாதம் பெறாமல் நல்ல நிலையில் இயங்கும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு (Primary Co-operative Housing Societies), தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் (Tamil Nadu Co-operative Housing Federation Ltd.) சொந்த நிதியிலிருந்து ரூ.100.00 கோடி அளவிற்கு கடன் வழங்கப்படும்.

# நகர் ஊரமைப்பு இயக்ககம்

## 4. சிதம்பரம் மற்றும் திண்டிவனம் கூட்டு உள்ளூர் திட்டப்பகுதிகளாக அறிவித்தல் மற்றும் கீரனூர் மற்றும் திருக்கழுக்குன்றம் பகுதிகள் தனித்த உள்ளூர் திட்டப்பகுதிகளாக அறிவித்தல்.

திண்டிவனம் மற்றும் சிதம்பரம் நகராட்சிகள் விரைவாக வளர்ந்து வரும் நகரங்களாக உள்ளன. எனவே, வளர்ச்சிகளை முறைப்படுத்தி திட்டமிட்ட நகரமாக எதிர்காலத்தில் வளர்ச்சியடைய கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் அவசியமாகிறது. அதேபோல், கீரனூர் மற்றும் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிகள் வேகமான நகர்ப்புற வளர்ச்சியினைக் கண்டு வருகின்றன. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சிதம்பரம் மற்றும் திண்டிவனம் ஆகிய பகுதிகளை கூட்டு உள்ளூர் திட்டப்பகுதிகளாகவும், கீரனூர் மற்றும் திருக்கழுக்குன்றம் பகுதிகள் தனித்த உள்ளூர் திட்டப்பகுதிகளாகவும் அறிவிக்கப்படும்.

## 5. திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கி திருப்பூரில் புதிய மண்டல துணை இயக்குநர் அலுவலகம் அமைத்தல்.

திருப்பூர் மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு மண்டல அலுவலகம் இல்லாததால், அம்மாவட்ட மக்கள் திட்ட அனுமதிக்காக சேலம் மற்றும் கோயம்புத்தூர் மண்டல அலுவலகங்களுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளதாலும், இதனால் அதிக கால விரயம் ஆவதாலும், மக்கள் அதிக சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இச்சிரமத்தினை கருத்தில் கொண்டு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை நிர்வகிக்க திருப்பூரில் புதிய நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்படும்.

## 6. மாமல்லபுரத்தில், சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து நிலையம் கட்டுதல்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டத்திலுள்ள மாமல்லபுரம் பல்லவர் காலத்தில் துறைமுக நகரமாக விளங்கியுள்ளது. இங்கு பல்லவர்களால் உருவாக்கப்பட்ட கற்கோவில்களும், சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய மண்டபங்களும் உள்ளன. இந்நகரம் யுனெஸ்கோவால் (UNESCO) அறிவிக்கப்பட்ட உலக பாரம்பரிய நகரமாக உள்ளது. சென்னையின் அருகாமையில் உள்ள மிக முக்கிய சுற்றுலாத் தலமாக உள்ளதால் சுற்றுலாப்பயணிகளுக்கு பேருந்து நிலையம் மிக அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்**, சுற்றுலாப்பயணிகள் பயன்பெறும் வகையில் 6.79 ஏக்கர் பரப்பளவில், ரூ.10.00 கோடி

மதிப்பீட்டில் கிழக்கு கடற்கரை சாலையையொட்டி புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

இப்பேருந்து நிலையம், சென்னை, செங்கல்பட்டு, கல்பாக்கம், புதுச்சேரி போன்ற நகரங்களுக்கு போக்குவரத்து மையமாக அமையும். மாமல்லபுரம் வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சியில் வசிக்கும் பொது மக்களும் இப்பேருந்து நிலையத்தால் பயன்பெறுவர்.

# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சென்னைப் பெருநகர திட்டப்பகுதியின் எல்லையை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரக்கோணம் வட்டத்தை உள்ளடக்கிய பகுதி வரை விரிவாக்கம் செய்தல்.**

சென்னை நகரத்தில் ஏற்பட்டு வரும் மக்கள் தொகை நெருக்கத்தை குறைக்கவும், சென்னையை சுற்றி அதிவேகமாக நகர்மயமாகி வரும் பகுதிகளில் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்தவும், அப்பகுதிகளில் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் வளர்ந்து வரும் பொருளாதார செயல்பாடுகளுக்கு தேவையான சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை உண்டாக்கும் நோக்கத்துடன், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,**சென்னை,காஞ்சிபுரம்,திருவள்ளூர் மாவட்டங்கள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம் வட்டத்தையும் உள்ளடக்கி **8,878**

சதுர கிலோ மீட்டர் அளவில் சென்னைப் பெருநகர திட்டப்பகுதியின் எல்லையை விரிவாக்கம் செய்யப்படும். இந்த விரிவாக்கம் இப்பகுதியில் ஒருங்கிணைந்த நகர்மயம் ஆவதை உறுதி செய்யவும், சமமான வளர்ச்சியை விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் ஏற்படுத்தவும், தற்போதுள்ள நகர்மையங்களையும், புதிய பொருளாதார வளர்ச்சி மையங்களையும் தேர்வு செய்யப்பட்டு, அந்த மையங்களுக்கு முழுமைத் திட்டங்களும் மற்றும் விரிவாக்கப்பட்ட பகுதி முழுமைக்கும் ஒரு மண்டல வியூகத் திட்டம் (Strategic Regional Plan) தயாரிக்கப்படும். இந்த வளர்ச்சித் திட்டங்களில், போக்குவரத்து, அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளமிக்க விவசாய நிலங்களை பாதுகாத்தல் போன்ற அம்சங்களுக்கு போதிய கவனம் செலுத்தப்படும்.

மேற்கண்ட குறிக்கோளை நிறைவேற்றும்

விதத்தில், தற்போதுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிர்வாக அமைப்பை பலப்படுத்தும் விதத்தில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

**8. எழும்பூர் இரயில் நிலையத்தையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் நடைமேம்பாலத்தை விரிவுபடுத்தவும், வ.உ.சி நகர் இரயில் நிலையத்தையும், ஐ.ஓ.சி பேருந்து நிறுத்தத்தையும் இணைக்க நடைமேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பல்வேறு வகையான போக்குவரத்து முறைகளை புறநகர் இரயில் மற்றும் துரித இரயில் போக்குவரத்துடன் ஒருங்கிணைக்க ஒரு விரிவான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ்வாய்வறிக்கையில், பல்வகை போக்குவரத்து முறையினை ஒருங்கிணைக்க நடை மேம்பாலங்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும்,**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** இரயில் மற்றும் பேருந்து தடங்களை இணைக்கும் முகமாக, எழும்பூர் இரயில் நிலையத்தையும் பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்க எழும்பூரில் உள்ள நடைமேம்பாலத்தை விரிவுபடுத்தவும், வ.உ.சி நகர் இரயில் நிலையத்தையும் ஐ.ஓ.சி பேருந்து நிறுத்தத்தையும் இணைக்க நடைமேம்பாலம் அமைக்கவும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 9. சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள சில பேருந்து பணிமனைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.

வாகன நெரிசல் மற்றும் போக்குவரத்தினை முறைப்படுத்த இரண்டாவது முழுமைத்திட்டத்தில் பல்வேறு திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் பேருந்து பணிமனையினை புதுப்பித்தலும் ஒரு முக்கிய அம்சமாகும். பெரும்பாலான பணிமனைகள் அவைகளுடைய தேவையினை பூர்த்தி செய்ய இயலவில்லை. மேலும், இடவசதியின்மையால் பேருந்துகள் பணிமனைக்கு வெளியே நிறுத்தப்படுகின்றன. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள சில பேருந்து பணிமனைகளை மறு சீரமைப்பு செய்வதன் மூலம் தரைத்தளத்தில் உள்ள பகுதியை கூடுதல் வாகனங்களை நிறுத்துவதற்கும்,

அவற்றுக்கு மேல் தளங்களில் உள்ள இடத்தை உரிய முறையில் பயன்படுத்தி வருவாயை அதிகரிக்கவும், போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள சில பேருந்து பணிமனைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 10. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள மேம்பாலங்களின் கீழுள்ள இடங்களை உரிய முறையில் உபயோகப்படுத்த ஆய்வறிக்கை தயாரித்தல்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள மேம்பாலங்களின் கீழுள்ள பகுதிகள் பயன்தரும் வகையில் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. இப்பகுதிகளில் கூடுதல் வாகன நிறுத்துமிடம், பசுமைப் பகுதிகளாக உருவாக்குதல், விளம்பரத்திற்கான இடம் போன்ற பயனுள்ள உபயோகத்திற்கு பயன்படுத்த அரசு கருதுகிறது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னை நகரில் உள்ள மேம்பாலங்களின் கீழுள்ள இடங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், அவற்றை சிறந்த முறையில் உபயோகப்படுத்தவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஆய்வறிக்கை தயாரிக்கப்படும்.

**11. சென்னை நகரில் ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி மற்றும் புரசைவாக்கம் போன்ற பழைய தொடர் கட்டட பகுதிகளில் மக்கள் வாழிட சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக ஆய்வு மேற்கொண்டு மறுவளர்ச்சி (Re-development) கொள்கை வகுத்தல்.**

சென்னை நகரில் ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி மற்றும் புரசைவாக்கம் போன்ற பழைய தொடர் கட்டடங்கள் நிறைந்த நகர் பகுதிகளில் வாழிட சுற்றுப்புற சூழ்நிலைகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக இப்பகுதிகளில் மறுசீரமைப்பு திட்டத்தின் மூலம் சுற்றுப்புற சூழல், பொதுபயன்பாட்டிற்கான திறந்தவெளியிட வசதிகளுடனும் (Public Space) அகன்ற சாலை வசதிகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான கட்டடங்களுடன் கூடிய ஒழுங்கு படுத்தப்பட்ட

சீரான நகர்ப்பகுதிகளாக மாற்றுவதற்கு மறு வளர்ச்சி (Re-development) செய்வது அவசியமாகும்.

எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** இப்பகுதிகளில் மறுவளர்ச்சித் (Re-development) திட்டங்களை செயல்படுத்த கலந்தாலோசகர்கள் மூலம் ஆய்வு செய்து உரிய வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வகுக்கப்பட்டு மறுவளர்ச்சிக்கான தனி செயல்பாட்டு கொள்கைகள் தயாரிக்கப்படும்.

## 12. சென்னைப் பெருநகர் பகுதியில் உள்ள பிரதான வணிகப்பகுதி மற்றும் தொடர் கட்டடப் பகுதிகளுக்கு முழுமையான தீயணைப்புப் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்.

சென்னைப் பெருநகர் பகுதியில், குறிப்பாக வணிக பகுதிகளில் குறுகிய சாலைகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் விதிமீறல் கட்டடங்களைக் கொண்டுள்ளதால் மிகுந்த இடநெருக்கடி கொண்டவையாக உள்ளன. இது தீ விபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகிறது. இதனால் தீ தடுப்பு மேலாண்மை மற்றும் அவசர கால நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சவாலாக உள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னைப் பெருநகர் பகுதியில்

உள்ள பிரதான வணிகப்பகுதி மற்றும் தொடர் கட்டடப் பகுதிகளுக்கு முழுமையான தீயணைப்புப் பாதுகாப்பு மேலாண்மைத் திட்டம் (Area based Fire Safety Management) தயாரிக்கப்படும்.

## 13. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான போக்குவரத்து மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்.

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம், சென்னை தனியார் பேருந்து நிலையம் மற்றும் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் ஆகியவற்றை இணைக்கும் சாலைகளில் அதிகமான பேருந்துகள் இயக்கப்படுவதால் கடுமையான போக்குவரத்து நெரிசலை சந்தித்து வருகின்றன. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம், சென்னை தனியார் பேருந்து நிலையம் மற்றும் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் ஆகியவற்றின் உள்ளே மற்றும் சுற்றியுள்ள பகுதிகளுக்கான போக்குவரத்து மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்படும். இதனால், அருகிலுள்ள மெட்ரோ இரயில் நிலையமும் போக்குவரத்து சாலை வசதியினை பெறுகிறது.

**14. நில உரிமையாளர்கள் பொது நோக்கத்திற்காக தேவைப்படும் நிலங்களை, தானமாக கொடுப்பதை ஊக்குவிக்க, வளர்ச்சி விதிகள் மற்றும் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.**

வளர்ச்சி விதிகளில் சாதாரணமாக அனுமதிக்கப்படும் தளப்பரப்பளவைவிட கூடுதலாக கட்டடம் கட்ட, உரிய கட்டணம் பெற்றுக் கொண்டு ஊக்கத்தளப்பரப்பளவு (Premium FSI) அனுமதிக்கப்படுகிறது. ஊக்கத்தளப்பரப்பளவு கட்டணத்தை பணமாகவோ, வளர்ச்சி உரிமை மாற்றம் (Transferable Development Rights) அல்லது சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றம் (Special Transferable Development Rights) மூலமாகவோ செலுத்தலாம் என விதிகளில் உள்ளது. இருப்பினும், ஊக்கத்தளப்பரப்பளவு கட்டணத்தை, விண்ணப்பதாரர்கள் பணமாக மட்டுமே செலுத்தி வருகின்றனர். வளர்ச்சி உரிமை மாற்றம் மற்றும் சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றம் ஆகியவை திட்ட அனுமதி கோரும் விண்ணப்பதாரர்களால்

அதிக அளவில் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, நில உரிமையாளர்கள் பொது நோக்கத்திற்காக தேவைப்படும் நிலங்களை, தானமாக கொடுப்பதை ஊக்குவிக்க, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** ஊக்கத் தளப்பரப்பளவு கட்டணத்தில், 50 சதவிகிதம் வளர்ச்சி உரிமை மாற்றம் அல்லது சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றம் வாயிலாக செலுத்துவதை கட்டாயமாக்க வளர்ச்சி விதிகள் மற்றும் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதனால், சாலை விரிவாக்கம், போக்குவரத்து கட்டமைப்பு போன்ற பொது நோக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தை, நில உரிமையாளர்கள் தாமாகவே முன்வந்து, தானமாக

அளிக்க முன்வருவார்கள். சிறப்பு வளர்ச்சி உரிமை மாற்றத்திற்கு போதுமான தேவையை உருவாக்கும் போது, குடிசைப்பகுதி மேம்பாட்டில் தனியார் துறை பங்கேற்கும் சூழ்நிலை உருவாகும்.

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்